முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 309/2022

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லட்சுமி | தொழில் | : |
| கணவர் பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | கிராமம் | : கொங்கணகிரி |
| வயது | : 45 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 27-03-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வா.சா.ஆ.14 மற்றும் 15 ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவை வாரிசு சான்றிதழ்கள். வா.சா.ஆ.14 மற்றும் 15 ஆவணங்கள் அ.வ.எண். 168/2019ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். அ.வ.எண். 168/2019 வழக்கில் கொங்கணகிரி கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து குறிப்பாணை பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இறந்து போன கிருஷ்ணமூர்த்தி கொங்கணகிரி பகுதியில் வசித்து வந்தார் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள குறிப்பாணை தொட்டிபாளையம் கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து பெற்றுள்ளேன் என்றால் சரிதான், இறந்து போன கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் நான் வாடகைக்கு இருந்தேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்திக்கு குடிப்பழக்கம் இருந்தால் நான் பொய்யாக அவர் மனைவி என்று பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கொங்கணகிரி மற்றும் தொட்டிபாளையம் கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து பெற்றதாக உள்ளது என்றால் சரியல்ல. எங்களுக்கு வேலம்பாளையம் கிராமத்தில் தான் கிராம நிர்வாக அலுவலரிடம் அலுவலகம் உள்ளது. கொங்கண கிரிக்கு கொங்கணகிரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகம் உள்ளது என்றால் எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கொங்கண கிரி

கிராம நிர்வாக அலுவலர் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் உண்மையான வாரிசுகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் என்பதால் எனக்கு வாரிசு சான்றிதழ் கொடுக்க மறுத்துவிட்டதால் நான் தொட்டிபாளையம் கிராம நிர்வாக அலுவலரிடம் வாரிசு சான்றிதழ் பெற்றேன் என்றால் சரியல்ல.

4. தாவா வழக்குரையில் சொல்லியவாறு 3ம் பிரதிவாதி முஸ்லீம் பெண் தான் ஆனால் கிருஷ்ணமூர்த்தியை காதல் திருமணம் செய்து கொண்ட பிறகு 3ம் பிரதிவாதி இந்துவாக மதம் மாறி பெயர் மாற்றம் செய்து கொண்டார். அன்று முதல் 3ம் பிரதிவாதியின் அனைத்து ஆவணங்களிலும் அவர் பெயர் ராஜேஸ்வரி என்று தான் உள்ளது என்றால் சரியல்ல. இதை பயன்படுத்திக் கொண்ட நான் சட்டவிரோதமாக ஆவணங்களை தயார் செய்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண். 168/2019 மற்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களும் சட்டத்திற்கு புறம்பாக பெறப்பட்ட பொய்யான ஆவணங்கள் என்றால் சரியல்ல. இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் உண்மையான வாரிசுகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.03.27 12:37:55 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.